குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.

முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

விரைவு நீதிமன்றம், ஓமலூர்

எஸ்.டி.சி..எண் 11/2023

ம.சா.3

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 28–ம் தேதி புதன் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்ரீராம் | தொழில் | |
| தந்தை பெயர் | கோவிந்தராஜ் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 11.56 மணி,

Complainant Govindharaju present. Advocate Mr.G.Munusamy present for Complainant. Accused Venu Present. Advocate Mr.P.Soundhararajan present for Accused.

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) எனது தந்தை நடத்தி வந்த பைனான்ஸ் நிறுவனத்தில் பதிவு சான்றிதழை எடுத்து வந்துள்ளேனா என்றால் ஆம். **அது எ.ம.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனம் 2020 ம் ஆண்டு மூடப்பட்டது. பணப்பற்றாக்குறையால் நடத்த முடியாத காரணத்தால் மூடப்பட்டது. எனது தந்தை பைனான்ஸ் நிறுவனத்தின் மூலம் சீட்டு நடத்தி வந்தார் என்றால் இல்லை. எனது தந்தை சீட்டு நடத்தி வந்தார் என்றாலும் அதில் முதலில் சீட்டு எடுப்பவர்களிடம் காசோலை மற்றும் கடனுறுதி சீட்டு உத்திரவாதமாக வாங்கி வைப்பது அவரது வழக்கம் என்றாலும் இந்த வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

2) எனது உண்மையில் சீட்டு நடத்தி வந்தார் என்றாலும் யாருக்கும் பைனான்ஸ் தரவில்லை என்றாலும் அப்படி எனக்கு எதுவும் தெரியவில்லை. எனது பிரமாண பத்திரிக்கையில் எனது நண்பர் கோபி முன்னிலையில் வைத்து ஆஜர் எதிரி ரூ.1,50,000/– கடனாக பெற்றார் என்று சொல்லியுள்ளேன், மேற்படி விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. ஆஜர் எதிரி கொடுத்த காசோலை IOB வங்கி என்று சொல்லியுள்ளேன், எனது தந்தையின் வங்கியைப் பற்றி விபரம் சொல்லாததால் காசோலை பற்றி முழு விபரமும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

3) எனது தந்தை பைனான்ஸ் நிறுவனம் என்ற பெயரில் சீட்டு நடத்தி அதில் பிணையமாக பெறப்பட்ட காசோலையை பயன்படுத்தி ஆஜர் எதிரியின் மீது காசோலை மோசடி வழக்கு தொடர்ந்து பணம் பறிக்கும் நோக்கத்தோடு செயல்படுகிறார் என்றால் சரியல்ல. எனது தந்தை சொன்னத்தின் அடிப்படையில் நான் பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரர் எனது தந்தை என்பதால் பொய்யான சங்கதிகளை நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.39 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.